**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | | |
|---|---|---|
| STC/CC.No. | : | CC.No.114/2022 |
| Deposition of Witness for | : | PW –4 |
| Name and Age | : | முத்துமாணிக்கம்–59 |
| Father / Husband Name | : | சகாதேவன் |
| Occupation | : | விவசாயம் |
| Village | : | கொள்ளுப்பட்டி |
| Taluk | : | பாலக்கோடு |

**நாள்** – 02.02.2026.

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**Accued Present.**

**அ.சா –4**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் கொள்ளுப்பட்டி கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1–யை தெரியும். அவரது எனது அண்ணன் மகன் ஆவார். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.1–க்கும், ஆஜர் எதிரிக்கும் இடையே அடிக்கடி எதாவது தகராறு ஏற்படும். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் தேதி, மாதம், வருடம் நினைவில் இல்லை. மாலை சுமார் 5 முதல் 6 மணியளவில் அ.சா.1–யை ஆஜர் எதிரி அடித்துவிட்டதாக ஊரில் பேசிக்கொண்டார்கள். பின்னர் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த அ.சா.1–யை நேரில் சென்று பார்த்தேன். அவருக்கு வலது பக்க கன்னத்திலும், பின் கழுத்து பகுதியிலும் காயம் ஏற்பட்டிருந்தது. இது குறித்து போலிசார் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போலவே போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எந்த மருத்துவமனைக்கு சென்று அ.சா.1–யை பார்தேன் என்றால் பாலக்கோடு அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன்.

**மறுவிசாரணை – இல்லை.**

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.02.02 17:47:15 +0530

Judicial Magistrate,
Palacode.